**தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் - 2018**

-------------------------------------------------------------------------------------------

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

-----------------------------------------------

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிறுவனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ளதாக நான் அபிப்பராயமொன்றை தெரிவிக்கவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

----------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ள என்னால் முடியாதிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு**

---------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின்தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, குறிப்பேடு, குறிப்பேட்டு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| | குறித்த நியமத்திற்கான தொடர்புடனான இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------ | ---------------------------------------- | ---------------- |
| (அ) | நிறுவனத்தினால் நடாத்தப்படும் செயலமர்வு நிகழ்ச்சித்திட்டங்களை கணக்கு வைப்பதற்காக பயன்படுத்தப்படும் மூல ஆவணங்களான பற்றுச்சீட்டுக்கள் தொடர் இலக்கங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிராத பெரும்பாலான சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கணனி கணக்கீட்டு முறைமைக்கு உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 42,757,709 தொகையான வருமானங்களின் சரியான தன்மை தொடர்பில் நியாயமான உறுதிப்பாடொன்றை கணக்காய்வின் போது பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | 2019 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தில் காணப்படும் பிரிவுகளால் நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக பட்டியல்களை வெளியிடல் கணக்குகள் பிரிவின் கணக்கீட்டு தொகுதியின் (Quick Book) மூலம் மேற்கொள்ளப்படுகின்றது . எவ்வாறெனினும், ரூபா 42,757,709 ஆக வருமானத்தினை சரியாக உறுதிசெய்யக்கூடியதாக இருந்ததுடன், அதற்குரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருந்தது . | கணக்கீட்டு நடைமுறையை நாளதுவரையாகவும் சரியாகவும் பேணுவதற்கு தேவையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை அறிமுகப்படுத்தி அவற்றை நடைமுறைப்படுத்த முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | நிறுவனத்தின் கணனி கணக்கீட்டு முறைமைக்கு (Accounting Software) உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகளை மாற்றயமைத்தல் மற்றும் அழித்தல் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வைக்கும் அங்கீகாரத்தின் கீழும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே கணக்கீட்டு முறைமையின் பாதுகாப்பிற்காக கடவுச்சொற்கள் இடப்பட்டு நுழைவு (Limited Access / Full Access) மட்டுப்படுத்தப்படாமை, மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு (Invoices) கணக்கீட்டு முறைமைக்கு வருமானம் | Quick Book கணக்கீட்டு மென்பொருளுக்காக தரவுகளை உள்ளடக்குதல் கணக்காளரினால் மேற்கொள்ளப்படாததுடன், கொடுக்கல் வாங்கல்கள் உட்செலுத்துதல் மூன்று உத்தியோகத்தர்களினூடாக மேற்கொள்ளப்படும் கணக்காளரால் முறைமையினை மேற்பார்வை செய்தல் மற்றும் தவறுள்ள இடங்களை தேடிப் பார்த்து உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தரவுகளை உள்ளடக்கும் போது இடம்பெறும் பொதுவான தவறுகளை திருத்துவதற்கு | கணக்கீட்டு முறைமையின் பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையும், தகவல்களின் உண்மையான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளை தாபிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை |

| | |
|---|---|
| தொடர்பாக தரவுகள் உள்ளடக்கப்படாமை போன்ற கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன், மீளாய்வாண்டின் போது கணக்கீட்டு முறைமையிலிருந்து அழிக்கப்பட்டிருந்த ரூபா 1,523,510 பெறுமதியான 22 கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் உயர் முகாமைத்துவத்திற்கு அறிந்திருக்கவில்லை. | கணக்காளருக்கு அதிகாரம் உள்ளது. 2019 ஆம் ஆண்டின் போது Quick Book கணக்கீட்டு மென்பொருளுடன் மேற்கொள்ளப்படும் கணக்கீட்டு பணிகளின் போது ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக மாத்திரம் பிறிதொரு கடவுச் சொல்லினூடாக பிரவேசித்தமை மட்டுப்படுத்தல் இடம்பெற்றுள்ளது. |

## 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமைகள்

| உரிய கணக்காய்வு நியமத்துடனான இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**<br>நியமத்தின் பிரகாரம் நிலையான வைப்பு வட்டி வருமானமான ரூபா 1,668,064 ஆன பணம் காசு உட்பாய்ச்சலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்திலிருந்தான காசு வெளிப்பாய்ச்சலொன்றாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான நிலையான வைப்பு வட்டி வருமானம், வருடத்தின் மிகைக்கு சீராக்கப்பட்டுள்ளமையால், காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சலொன்றாக சீராக்கப்படவில்லை. | நிறுவனத்தினால் இலங்கை பொதுத்தறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட வேண்டியமை. |

## 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலையான வைப்புக்களின் மீதி ரூபா 23,739,447 ஆன போதிலும், நிலையான வைப்புக்கள் மீள புதுப்பிக்கும் சான்றிதழ் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான வைப்பு மீதி ரூபா 22,041,444 ஆனமையால் அந்த மீதிகளுக்கிடையே ரூபா 1,698,003 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நிலையான வைப்பு மீதி சரியாக கணிப்பிடப்பட்டுள்ளதுடன், 2018.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 23,739,447.57 ஆக உறுதிப்படுத்துகின்றேன். | நிதிக்கூற்றுக்களை பயன்படுத்தி பொருளாதார தீர்மானங்களை எடுக்கும் தரப்பினருக்கு சரியான தகவல்களை வழங்கும் வகையில் கணக்கீட்டு பதிவுகளை சரியாக பேணுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தினால் பேணப்படும் பல்வேறு கால அட்டவணைகள் / செயலமர்வுகள் மற்றும் பரீட்சைகளுக்காக பெற வேண்டிய பணம் 2017 ஆம் ஆண்டிற்கு ரூபா 12,822,429 ஆக இருந்ததுடன், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 15,320,597 ஆகும். அவற்றுள் 90 நாட்களுக்கு மேற்பட்ட பெறவேண்டிய மீதி ரூபா 6,824,450 ஆகும். | 2018.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான பெற வேண்டிய ரூபா 15,320,597 ஆன பணத்தில் 2019.03.31 ஆந் திகதியளவில் நிறுவனத்திற்கு கிடைத்துள்ள பணம் ரூபா 11,412,045 ஆகும். அது பெற வேண்டிய மொத்தப் பணத்தின் சதவீதமாக எடுக்கும் போது 75 சதவீதமாகும். | நிறுவனத்திற்கு பெற வேண்டிய பணத்தை துரிதமாக அறவிடுவதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன், அது தொடர்பில் செயற்திறனாகவும் பயனுள்ள உத்திகளை அபிவிருத்தி செய்ய வேண்டியமை. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 175(1) | நிறுவனத்தின் பல்வேறு பாடநெறிகளிலிருந்து பணத்தை சேகரிக்கும் செயன்முன்னேற்றம் காண்பிக்கப்படும் வகையில் கட்டுப்பாட்டு கணக்கொன்றின் தன்மையில் அறிக்கை பதிவொன்றை பேணச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக பங்குபற்றுநர்களிடமிருந்து பெற வேண்டிய பணம் மற்றும் அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பில் எதிர்காலத்தில் கட்டுப்பாட்டு கணக்கொன்றினூடாக நடவடிக்கைகள் எடுப்பதற்குஉரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. | நிறுவனத்தின் வருமானங்களை சேகரிப்பதற்காக பொருத்தமான கட்டுப்பாட்டு நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப் பொன்றானமை |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி மற்றும் 3 ஆம் பந்தி | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டிராததுடன், அந்த சுற்றறிக்கையின் 3 ஆம் பந்திக்கமைய பதவியணி திறன்கள் தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | தேசிய தொழில் கற்கைகள் நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பதவியணியின் திறன்களை இனங்கண்டு அதற்கமைய மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 8,573,023 ஆன மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா 5,149,301 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 3,423,722 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நிறுவனத்தின் செயற்பாட்டு வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 13,121,903 இனால் அதிகரித்தமை மற்றும் திறைசேரி மானியங்கள் ரூபா 524,686 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பெறுகைத் திட்டத்திற்கமைய நிறுவனத்திற்கு 2 போட்டோ பிரதி இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 2 மில்லியனான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1 (ஆ) ஆரம்பிப்பதற்கு முன்னர் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த குழுவினால் இவ்வாறான தொழில்நுட்ப பொருட்களை கொள்வனவு செய்யும் அமைப்புக் குறியீடுகள் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், பெறுகைகள் வழிகாட்டியின் 5.3.1(ஈ) இன் பிரகாரம் அந்த மீளாய்வு இடம்பெற்றிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். எஞ்சிய பெறுகை நடவடிக்கைகளுக்காக கணக்காய்வு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றேன். | பெறுகை வழிகாட்டிகளில் காண்பிக்கப்பட்டுள்ள திட்டவட்டமான அறிவுரை மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்தினால் டிப்ளோமா பாடநெறிகளினூடாக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 7,150,000 ஆக வருமானத்தை உழைப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 04 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டமையினால் | தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனம் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 7,150,000 மதிப்பிடப்பட்ட வருமானமொன்றும், 06 டிப்ளோமா பாடநெறிகளையும் நடாத்தி பெறத் திட்டமிட்டுள்ளதுடன், 04 | திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் உச்ச மட்டத்தில் நடைமுறைப்படுத்த நிறுவனம் முடிந்த எல்லா முயற்சிகளையும் |

பெறப்பட்டிருந்த வருமானம் சுமார் ரூபா 5,100,000 மாத்திரம் ஆகும். அவ்வாறே நிறுவனத்தினால் 2018 ஆம் ஆண்டினுள் 63 இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியமையின் மூலம் ரூபா 5,670,000 ஆன வருமானத்தை ஈட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான 39 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தி ரூபா 3,600,000 ஆன வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. மேலும், 2018 ஆம் ஆண்டினுள்ளும் 66 ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் மூலம் ரூபா 2,970,000 ஆன வருமானத்தைப் பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டபோதிலும், உள்ளபடியாக ஈட்டப்பட்டிருந்த வருமானம் ரூபா 2,580,000 மாத்திரம் ஆகும்.

டிப்ளோமாக்களை நடாத்துவதன் மூலம் ரூபா 5,100,000 ஆன வருமானத்தை பெறக்கூடியதாக இருந்தது.
தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனம் 2018 ஆம் ஆண்டினுள் இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் 63 இனை நடாத்தி ரூபா 5,670,000 ஆன வருமானமொன்றைப் பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதுடன், 39 பாடநெறிகளை மாத்திரம் நடாத்துவதன் மூலம் ரூபா 3,600,000 தொகையை ஈட்ட முடியுமாக உள்ளது.
தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம் 2018 ஆம் ஆண்டினுள் 66 ஒருநாள் செயலமர்வுகளை நடாத்தி ரூபா 2,970,000 ஆன வருமானமொன்றை பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதுடன், 43 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தியமையால் ரூபா 2,580,000 தொகையை ஈட்ட முடியுமாக உள்ளது.

எடுக்க வேண்டியதுடன், செயல்நடவடிக்கைகத் திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை.